**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 178/2024**
**U/s. 294(b),506(1) IPC 4 TNPCEI Act**
**PROSECUTION WITNESS NO. 2 (LW.2 )**

| | | |
|---|---|---|
| **Name** | : சுரேஷ்குமார் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2025** |

**1** வது எதிரி ஆஜர்.**2** வது எதிரி ஆஜர் இல்லை. **355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா , நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

## <u>C.C.No. 178/2024 09.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 4.30

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் சத்யாநகர் , சுண்ணாம்பு கால்வாய் ரோட்டில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது நண்பர் ஆவார். மாதம் ஞாபகமில்லை. கடந்த 2022ம் வருடம் குடும்ப சூழ்நிலை காரணமாக அசா1ன் மனைவி பெயரிலுள்ள சொத்தான சொந்தமான வீட்டின் அசல் பத்திரத்தை கணேசன் என்பவரிடம் கொடுத்து ரூ. 60,000/- கடனாக வாங்கியிருந்தார்கள். ஆஜர் எதிரி கணேசனிடம் கொடுத்த அசல் பத்திரத்தை பெற்று கொண்டதாகவும், கடந்த 22ம் தேதி கணேசன் என்பவரிடம் அசல் பத்திரத்தை திருப்பவதற்காக சென்றோம். பத்திரத்தை வாங்கி தருகிறோம் என்று அசா1யை அலைகழித்தார். 2023 ம் வருடம் நானும் சுரேஷ்பாபுவும் அசல் பத்திரத்தை வைத்துள்ள நபர் கடைக்கு வந்துள்ளதாக, கணேசன் தெரிவித்தால் நாங்கள் அங்கு சென்றோம். அங்கிருந்த ஆஜர் எதிரி ரூ. 60,000/-ற்கு நாள் ஒன்றுக்கு வட்டியாக ரூ. 6000/- என ரூ.9,40,000/-அசல் ரூ. 60,000/- ஆக மொத்தம் 10,00,000/- கொடுத்தால் தான் அசல் பத்திரத்தை தருவேன் என்று ஆஜர் எதிரி சொன்னார். அது சம்மந்தமாக அசா1ற்கும் ஆஜர் எதிரி மற்றும் கணேசனிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அசா1 மீட்டர் வட்டியாக இருக்கிறது என்று தெரிவித்து விட்டு நானும் அசா1வும் அரண்மனை காவல்நிலையத்திற்கு வந்து சம்பவம் குறித்து அசா1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** அசா1ற்கும் எனக்கும் எத்தனை வருட பழக்கம் என்றால் 2-3 ஆண்டுகள் இருக்கும். அசா1ன் மனைவி, பெற்றோர் மற்றும் குழந்தைகளின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரியின் பெயரும் தெரியாது. மேற்படி சம்பவத்தின் புகாரை யார் எழுதினார் என்றால் நான் எழுதவில்லை , அசா1ம் எழுதவில்லை யாரையோ அழைத்து எழுதசொன்னார். அவர் யார் என்று எனக்கு

தெரியாது. காவல்நிலையத்தில அசா1 எந்த தேதி மற்றும் எந்த நேரத்தில் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் இந்நீதிமன்றத்தில் வேறு வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அசா1 கடன் வாங்கியதற்கு கடன் ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை. நான் அசா1கூறியதை வைத்து கடன் வாங்கிய தொகையை குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் சரிதான். 2 வது எதிரி கணேசன் கடைக்கு வரசொல்லி நாங்கள் எந்த தேதியில் சென்றோம் என்றால் தெரியாது. எத்தனை மணிக்கு என்றால் மாலை நேரம். புகார் கொடுத்தன்று அசா1 வுடன் சென்றஎன்னிடம் போலீசார் விசாரணை எதுவும் செய்யவில்லை. கையெழுத்து செய்ய சொன்னார்கள்.

2.நான் ஒரே ஒரு கையெழுத்து மட்டும் செய்தேன். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எழுதியிருந்த தாளில் தான் கையெழுத்து செய்தேன். அதிலுள்ள விவரம் தெரியுமா என்றால் எதிரி பணம் வாங்கியது சம்மந்தமாக புகார் குறித்து எழுதப்பட்டிருந்து என்று அசா1 கூறினார். போலீசார் தான் கையெழுத்து வாங்கினார்கள். அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆய்வாளர் நீதிமன்றம் மூலம் பார்த்துகொள்ள அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். தஞ்சை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 429/2023 என்ற எண்ணில் அசா1ன் மனைவி மற்றும் இரண்டாவது எதிரி கணேசன் மனைவி மீது 1ம் எதிரி உரிமையியல் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு அசா1ன் குடும்ப விவரங்கள் தெரியவில்லை என்றாலும், என்னை அசா1 கட்ட பஞ்சாயத்து செய்வதற்காகவே அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. எனக்கும் காவல்நிலையத்திற்கும் நெருங்கிய தொடர்பு என்பதாலும், நான் போலீஸ் தரப்பில் சாட்சியாக அதிக வழக்குகளில் இருந்துள்ளேன் என்பதாலும், இந்த வழக்கில் அரசு தரப்பிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. அசா1 எனக்கு நண்பர் என்று சொல்கிறேன் என்றாலும், அவரது அடமான சொத்து விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அசா1 என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அசா1 எப்போது கடன் வாங்கியதாக கூறினார் என்றால் தேதி, மாதம் தெரியாது. 2022 ம் வருடம் வாங்கினார். அசா1 2 வது எதிரியிடம் தான் கடன் வாங்கினார். 2 வது கணேசன் வேறு ஒருவரிடம் கடன் வாங்கி கொடுத்தாக கூறினார். அசா1 2 வது எதிரியிடம் கடன் வாங்கியபோது நான் உடன் இருந்தேன் என்றால் இல்லை. கேள்விபட்டேன். கடன் வாங்கும் சமயத்தில் வட்டி குறித்து பேசப்படும் என்றால் சரிதான். அசா1 வாங்கிய கடனிற்கு எவ்வளவு வட்டி என்றால் எனக்கு தெரியாது. எனக்கு சம்பவம் குறித்து தெரியாது என்றாலும், போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க

நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சட்டவிரோதமாக கட்டபஞ்சாயத்து செய்து வருவதால் என்னை அழைத்து சென்று பணம் வாங்கிவிடலாம் என்று நினைத்தார் என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அசா1 2 வது எதிரியிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரிதான். கணேசன் என்பவர் வேறு ஒரு நபரிடம் கடன் வாங்கி கொடுததார். 2 வது எதிரி அசா1யிடம் அதிகபடியான வட்டி , பணம் கேட்டு தொந்தரவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கும் 2 வது எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம்– S.T.கனிமொழி.,L.L.M
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.